
பக்கங்கள்: 08 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 12 திங்கட்கிழமை 25.05.2020 கதிர் 69



# 10 ஆக உயர்ந்தது கொரோனா சாவு!

## குவைத்திலிருந்து நாடு திரும்பிய பெண்ணே பலி

கொழும்பு, மே 25

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பெண்ணொருவர் இன்று உயிரிழந்துள்ளார். இதையடுத்து கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆக அதிகரித்துள்ளது.

2

# 695 பேர் குணமடைவு; 444 பேர் சிகிச்சையில்

கொழும்பு, மே 25

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியவர்களில் மேலும் 21 பேர் குணமடைந்து இன்று வீடு திரும்பியுள்ளனர். இதன்படி தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 695 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட 1,148 பேரில் தற்போது 444 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, மேலும் 79 பேர் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் வைத்தியசாலைகளில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

# சமூக இடைவெளி பேணாத நபர்கள் நாளை முதல் கைது!

## பொலிஸார் அறிவிப்பு

பொது இடங்களில் ஒவ்வொரு நபருக்கும் இடையே ஒரு மீற்றர் தூரத்தைச் சமூக இடைவெளியாகப் பேணாத நபர்கள் நாளை முதல் பொலிஸாரால் கைது செய்யப்படுவர் எனப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் இன்று வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் மூலம் பொலிஸாருக்கு இது தொடர்பில் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பொது இடங்களில் சமூக இடைவெளியை கட்டாயமாகப் பேணுமாறு பொதுமக்கள் கோரப்பட்டுள்ளனர். சமூக இடைவெளியை பாதுகாக்காத நபர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் சி.சி.ரி.வி காட்சிகள் ஆதாரமாகப் பயன்படுத்தப்படும்.

2

# சிறைக்குள் கொரோனா பேராபத்து!

## தம்மை விடுதலை செய்யுமாறு அரசியல் கைதிகள் கோரிக்கை

கொழும்பு, மே 25

சிறைச்சாலைகளில் போதிய சுகாதார வசதிகள் இல்லை என்பதாலும், மருத்துவப் பரிசோதனைகள் உரிய முறையில் நடைபெறுவதில்லை என்பதாலும், கொரோனா தொற்றின் ஆபத்து அதிகமாக உள்ளது எனச் சுட்டிக்காட்டியிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள், இவற்றைக் கவனத்திற் கொண்டு தம்மை விடுதலை செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள

2

# குவைத்திலிருந்து திரும்பியவர்கள் கொரோனாவுக்கு தொடர் இலக்கு!

## இன்றும் 7 பேர் அடையாளம்; மொத்தப் பாதிப்பு 1,148

கொழும்பு, மே 25

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 07 பேர் இன்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

2

# பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் நாளை முக்கிய பேச்சு!

கொழும்பு, மே 25

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாடு தழுவியதாகப் பாடசாலைகள் உள்ளிட்ட கல்விச் செயற்பாடுகள் முற்றிலுமாக நிறுத்தப்பட்டிருந்த நிலையில் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது குறித்த முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை நடைபெறவுள்ளது.

2

# குளவிக்கொட்டுக்கு இலக்காகி பெண் தோட்டத்தொழிலாளி பலி

## மலையகத்தில் தொடரும் சோகம்



ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா தோட் டத்தில் இன்று முற்பகல் குளவிக்கொட்டுக்கு இலக்காகி பெண் தோட்டத் தொழிலாளி ஒருவர் பலியாகியுள்ளார். அத்துடன், மேலும் 8 பேர் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக டிக்கோயா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

2



# வெளிநாட்டிலிருந்து இலங்கையர்களை அழைப்பது தொடர்பில் மீள்பரிசீலனை!

வெளிநாட்டிலிருந்து அழைக்கப்படும் இலங்கையர்கள் பலருக்குக் கொரோனா தொற்று இருப்பதால் உடனடியாகக் கூடுதல் அளவில் இலங்கையர்களை நாட்டுக்குள் அனுமதிப்பது தொடர்பில் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டியிருக்கின்றது எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நேற்று அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளர்கள் 52 பேரில் 49 பேர் குவைத்திலிருந்து வந்தவர்கள். இருவர் கடற்படைச் சிப்பாய்கள். ஒருவர் இந்தோனேசியாவிலிருந்து வந்தவர்.

உள்ளூரில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், வெளிநாடுகளில் இருந்து வரும் இலங்கையர்கள் பலருக்குத் தொற்று இருப்பது கண்டறியப்படுவதால் பெருந்தொகையான இலங்கையர்களை ஒரேயடியாக அழைத்து வருவது மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும். வைரஸ் பரவல் கட்டுக்குள் இருக்கும் நிலை தொடர வேண்டும் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# வாழ்வாதாரத்திற்கு ஏங்கும் வாழைச் செய்கையாளர்களுக்கு விரைந்து நேசக்கரம் நீட்டக் கோருகிறார் பிறேமச்சந்திரன்



யாழ்ப்பாணம்,மே 25

அம்பன் சூறாவளியால் யாழ்ப்பாண குடியிருப்பாளர்கள் மட்டுமின்றி வாழை செய்கையாளர்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு விரைவாக நிவாரணம் வழங்க வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் இணைப் பேச்சாளருமான சுரேஷ் க.பிறேமச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வங்காள விரிகுடாவில் ஆரம்பித்து இந்தியாவின் மேற்குவங்க மாநிலத்தினூடாகச் சென்ற அம்பன் புயலின் பாதிப்புகள் இலங்கையிலும் ஏற்பட்டது. குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முழுமையாகவும் பகுதியளவிலும் பல வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளமையுடன் இந்தச் சூறாவளியின் காரணத்தால் விவசாயிகளும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வாழைப்பயிர்ச்செய்கைக்குப் பெயர்பெற்ற வலிகாமம் கிழக்கு பிரதேசத்தின் நீர்வேலி, கோப்பாய், இருபாலை, சிறுப்பிட்டி, உரும்பிராய் போன்ற பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள வாழை பயிர்ச்செய்கை பெருமளவில் பாதிப்படைந்துள்ளது. ஏறத்தாழ வலிகாமம் கிழக்கில் 800 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளில் இவ்வாறான இழப்புகள் ஏற்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே கொரோனா பாதிப்பு காரணமாக வாழைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கான உரிய சந்தை வாய்ப்புகள் பாதிக்கப்பட்டுள்ள சூழலில், அம்பன் சூறாவளியின் தாக்கம் அவர்களுக்கு மேலும் பேரிடியாக அமைந்துள்ளது. இதனால் அவர்களது வாழ்வாதாரம் முற்றிலும் தடைப்பட்டுள்ளது. விவசாயிகள் வாழைச் செய்கையையே கைவிட்டுவிடலாமோ என்ற முடிவிற்கு வந்துள்ளனர்.

நேற்றைய தினம் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்திய யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கான நஷ்ட ஈட்டைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பிலும் வாழைக்கு ஏற்பட்டுள்ள சேதம் குறித்து உரிய தரப்பினரின் தகவல்களைப் பெற்றுக்கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியுள்ளார்.

இந்த நிலையில் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகமும், யாழ்ப்பாண விவசாயத் திணைக்களமும் முழுமையான தரவுகளை விரைவாகப் பெற்றுக்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துரிதமாக உரிய நிவாரணங்கள் கிடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். - என்று கேட்டுக்கொண்டார்.

## பாடசாலைகளை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான திட்டம் ஒன்றைத் தயாரிப்பதே நாளைய சந்திப்பின் நோக்கம் என்று கல்வி அமைச்சின் கல்விப் பிரிவுச் செயலாளர் நிரஞ்சன் சந்ரசேகர தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக கடந்த மார்ச் மாதம் 13ஆம் திகதி முதல் நாட்டின் அனைத்துப் பாடசாலைகளையும் மூடுவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்தது.

இந்த நிலையில் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமைய பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது குறித்து ஆரம்பத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படுகின்றது எனக் கல்வி அமைச்சின் கல்விப் பிரிவு செயலாளர் நிரஞ்சன் சந்ரசேகர மேலும் கூறியுள்ளார்.

## 10 ஆக உயர்ந்தது ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குவைத்திலிருந்து நாடு திரும்பி திருகோணமலை இராணுவ முகாமில் கட்டாயத் தனிமைப்படுத்தலில் இருந்த கம்பஹா மாவட்டம், பயாகலப் பகுதியைச்சேர்ந்த 51வயதுடைய பெண்ணொருவர் இன்று அதிகாலை திடீரெனச் சுகயீனமுற்று உயிரிழந்தார். அதன்பின்னர் அவரின் மாதிரிகள் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு கொரோனா பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டன.

இதன்போது அந்தப்பெண் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாகவே உயிரிழந்துள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அதற்கமைய இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

## குளவிக்கொட்டுக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கோயா தரவலை தோட்டத்தை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான அம்பிகா (வயது - 48) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

டிக்கோயா தோட்ட தேயிலை மலையில், தோட்டத்தொழிலாளர்கள் கொழுந்து பறித்துக்கொண்டிருக்கையிலேயே இன்று முற்பகல் 10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மரமொன்றில் இருந்த குளவிக்கூடு மீது கழுகு மோதியதாலேயே குளவிகள் கலைந்துவந்து தொழிலாளர்களைச் சரமாரியாகத் தாக்கியுள்ளன.

இரண்டு ஆண் தொழிலாளிகள் உட்பட 8 பேர் குளவிக்கொட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## குவைத்திலிருந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கமைய தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 1,148 ஆக உயர்வடைந்துள்ளது.

இன்று புதிய தொற்றாளர்களாக அடையாளம் 07 பேரும் குவைத்திலிருந்து நாடு திரும்பி மின்னேரியா தனிமைப் படுத்தல் நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருந்தவர்கள் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

நேற்று 52 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்தனர். அவர்களில் 49 பேர் குவைத்திலிருந்து நாடு திரும்பி திருகோணமலை, மின்னேரியா ஆகிய தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருந்தவர்கள் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க கூறினார்.

## சமூக இடைவெளி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றம் நிரூபிக்கப்பட்ட ஒருவருக்கு அதிகபட்சம் ஆறு மாத காலச் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

நாட்டில் ஒரே ஒரு சட்டம் இருப்பதால் அனைத்து மதங்களும் தங்கள் மதத்தைப் பொருட்படுத்தாமல் இணங்க வேண்டும் என்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண கூறினார்.

## சிறைக்குள் கொரோனா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனுவில் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தற்போதைய சூழ்நிலையில் எமது விடுதலை தொடர்பில் விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டும் என வினயமாக வேண்டுகிறோம். தற்போது கொரோனா அதிகமாகமாய் பரவுகின்றது. சிறையில் சரியான சுகாதார வசதியில்லை. மருத்துவப் பரிசோதனை சரியாக நடைபெறுவது இல்லை.

நாம் இங்கு 17,19,20 வருடங்களாக மிக நீண்ட காலமாகமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளோம். குடும்பத்தைப் பிரிந்து அதிக காலாம் சிறையில் துன்பப்படுகின்றோம். தயவு செய்து இந்தநிலை கவனத்தில் எடுத்து எம்மை விடுதலை செய்வதற்கு காத்திரமான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். தொற்று எம்மை தாக்குவதற்கான சந்தர்ப்பம் சிறையில் அதிகம் இருப்பதால் விரைவில் நடவடிக்கை எக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம் என்று தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி.க்கள் பலருடனும் இது குறித்து அவர்கள் பேசியுள்ளனர்.

## சிறுமி மீது துஷ்பிரயோகம்: 14 வயதுச் சிறுவன் கைது!

மட்டக்களப்பில் 14 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய 14 வயது சிறுவன் ஒருவன் கைதுசெய்யப்பட்டுள்ளான் எனவும், பாதிக்கப்பட்ட சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

மருமகள் முறையிலான சிறுமியை அதே பிரதேசத்தைச் சேர்ந்த 14 சிறுவன் காதலித்து வந்துள்ளான் எனவும், சம்பவ தினமான நேற்றுமுன்தினம் 12 மணியளவில் கிரான்வேம்பு பகுதியிலுள்ள தனது சகோரனின் வீட்டுக்கு சிறுமியை அழைத்துச் சென்று அங்கு அச்சிறுமியை சிறுவன் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினான் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமி உறவினரிடம் நடந்த சம்பவத்தைத் தெரிவித்ததையடுத்து பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து சிறுவனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமியை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

## 628 கடற்படையினருக்கு 'கொரோனா' 313 பேர் தொற்றிலிருந்து மீண்டார்கள்

கொழும்பு, மே 25

இலங்கையில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியவர்களில் 628 பேர் வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த சிப்பாய்கள் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்களில் 313 பேர் குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியுள்ளனர் என்று கடற்படையின் ஊடகப் பிரிவு இன்று அறிவித்துள்ளது.

315 கடற்படையினர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், அவர்களில் 62 பேர் வெலிசறையிலுள்ள கடற்படை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் கடற்படையின் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## உண்மையை வெளிப்படுத்த கோருகிறார் ரணில்

நாட்டின் பொருளாதார நிலை தொடர்பிலான உண்மைத் தன்மையை மக்களுக்கு வெளிப்படுத்துமாறு அரசாங்கத்திடம் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நிலை தொடர்பில் அரசாங்கம் வெளிப்படுத்தும் தகவல்களில் உண்மைத்தன்மை இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் இதை குறிப்பிட்டுள்ளார்.

சரியான உண்மைத் தகவல்களை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## திருமணத்தில் அதிகபட்சம் 100 விருந்தினர்

திருமண வைபவங்களில் பங்கேற்கக்கூடியவர்களின் எண்ணிக்கை தொடர்பில் புதிய நடைமுறையை சுகாதார அமைச்சு தெளிவுபடுத்தியுள்ளது.

திருமண மண்டபத்தில் அமரக் கூடியவர்களில் 40 சதவீதத்துக்கு விஞ்சாமல் நிகழ்வுக்கு அழைக்கப்படும் விருந்தினர்களின் எண்ணிக்கை இருக்கவேண்டும் என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், எந்த நேரத்திலும் 100 க்கும் மேற்பட்ட விருந்தினர்களை விழா மண்டபத்தில் அனுமதிக்கக்கூடாது என்று சுகாதார அமைச்சின் சுற்றுச்சூழல் சுகாதார பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் லக்ஷ்மன் கம்லத் தெரிவித்தார்.

100 க்கும் மேற்பட்டவர்கள் திருமண நிகழ்வில் பங்கேற்பது சட்டத்துக்குப் புறம்பானது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விருந்தினர்கள் அனைவரும் ஒரு மீற்றர் இடைவெளியில் இருக்கவேண்டும், மணமக்கள் உட்பட அனைவரும் முகமூடிகளை அணியவேண்டும், கட்டியணைத்தல், கைகொடுத்தல் தவிர்க்கப்படவேண்டும் தொடுகை அல்லாமல் வாழ்த்துக்கள் தெரிவிக்க வேண்டும் குழுவாக ஒளிப்படம் எடுப்பது தவிர்க்கப்படவேண்டும்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# கிழக்கைச் சூழும் பேராபத்து

பௌத்த மத பீடங்களை அண்மையில் சந்தித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதன் பின்னர் முக்கிய ஒரு முடிவை அறிவித்திருக்கின்றார்.

கிழக்கில் மத ஸ்தலங்கள், புராதன மையங்கள், தொல்பொருள் இடங்கள் பறிபோகின்றமையையும் சூறையாடப்படுகின்றமையையும் இனி மேலும் பொறுத்துக் கொள்ள முடியாது. கிழக்கில் தொல்லியல் சார்ந்த இடங்களை அடையாளம் கண்டு அவற்றைப் பாதுகாப்பதற்கு இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண தலைமையில் விசேட ஜனாதிபதி செயலணி ஒன்று அமைக்கப்படும் என அவர் அறிவித்திருக்கின்றார்.

தமிழர் தரப்பு 'ஸீரியஸாகக்' கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் இது. ஆனால் ஓரிரு தமிழ்த் தலைவர்களைத் தவிர ஏனைய யாரும் இந்த அறிவிப்புக் குறித்து – அதில் பொதிந்து கிடக்கும் பேராபத்துக் குறித்து – கவனத்தில் கொண்டவர்களாகவோ, சிரத்தை காட்டியவர்களாகவோ தெரியவில்லை.

கிழக்கில் தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் தனித்துவத்தையும் இருப்பையும் முற்றாகக் கபளீகரம் செய்து ஆக்கிரமிக்கும் பௌத்த, சிங்களப் பேரினவாதக் கபடத் திட்டத்தின் ஒரு முக்கிய நடவடிக்கை இது.

தமிழரின் வரலாற்றுத் தொன்மையையும், சரித்திரச் சான்றுகளையும், காலாதி கால பூர்வீக உரிமைகளையும் மறைத்தழித்து, அப்பிரதேசங்களைக் கபளீகரம் செய்து ஆக்கிரமிக்கும் ஒரு பெருந் திட்டத்தின் முதல்படியே மேற்படி அறிவிப்பாகக் கட்டவிழ்கின்றது.

தமிழர் தாயகத்தை – குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தை – பௌத்த மயமாக்கும் துரித திட்டத்தின் பூர்வீக நடவடிக்கையாகவே – ஆரம்ப அடிகளின் வெளிப்பாடாகவே – இந்த அறிவிப்பைத் தமிழினம் மிகுந்த எச்சரிக்கையோடு நோக்க வேண்டும்.

கிழக்கில் தொல்லியல் சார்ந்த இடங்களை இனங்கண்டு அவற்றைப் பாதுகாப்பதற்கு பாதுகாப்புச் செயலாளர் தலைமையிலேயே விசேட ஜனாதிபதி செயலணி அமைப்பது என்பது மிகச் சிறிய விடயம் அல்ல. மிகப் பாரதூரமான – ஆழமான – சூழ்ச்சித் திட்டங்கள் பொதிந்த – மிக உச்சமட்ட நடவடிக்கையாகும்.

அதுவும், ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் முக்கிய தமிழர் தாயகப் பகுதியிலேயே இந்தத் திட்டத்தை முன்னெடுக்க ஆட்சித் தலைமை – அதிகாரத் தரப்பு – கங்கணம் கட்டி நிற்கின்றது.

தமிழர் தாயகத்தை – கிழக்கு மாகாணத்தை – பௌத்த மயமாக்கும் பேரினவாத ஆக்கிரமிப்புத் திட்டத்தின் இலக்காக இது கட்டவிழ்ந்தாலும், அதற்குள் அப் பகுதிகளில் உள்ள தமிழர்களை விரட்டி அடித்து, அங்கு இராணுவப் பிரசன்னத்தை நிலை நிறுத்தி, இரணுவ மயமாக்கலையும் இந்தத் திட்டம் தனது உள்நோக்கமாகக் கொண்டிருக்கின்றது என்பது வெள்ளிடை மலை.

பிரிட்டனிலிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் 1948 களில் இருந்தே இலங்கைத் தீவில் தமிழர்களின் பூர்வீகத் தாயகப் பிரதேசங்களை சூறையாடி, கபளீகரம் செய்து ஆக்கிரமித்து, அந்தப் பிரதேசங்களை பௌத்த, சிங்கள மயப்படுத்தும் திட்டம் ஆட்சித் தரப்புகளின் பிரதான பொறுப்பாகவே கட்விழ்ந்து வருகின்றது.

அதற்காக அவர்கள் முதலில் கையில் எடுத்தது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களாகும்.

பிரதமர் டி.எஸ்.சேனநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் இருந்தே முறையான திட்டமிடல் மூலம் இது முன்னெடுக்கப்பட்டது.

முதலில் தமிழர்களின் பூர்வீகத் தாயகமான வடக்கையும், கிழக்கையும் துண்டாடிப் பிரிக்கும் கல்லோயா, கந்தளாய் குடியேற்றத் திட்டங்கள் பெருத்த எடுப்பில் மேற்கொளப்பட்டன.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் கிழக்கில் தமிழர்களைத் தனிமைப்படுத்தித் தமது பூர்வீக மண்ணிலேயே சிறுபான்மையினராக்கி, ஓர் அச்ச – அவல – வாழ்வுக்குள் அவர்களை முடக்கிய பௌத்த சிங்களப் பேரினவாதம், அடுத்த கட்டத்துக்குப் பின்னர் நகர்ந்தது.

திட்டமிடப்பட்ட சிங்கள மயப்படுத்தலின் அடுத்த கட்டமாக இராணுவ ஆக்கிரமிப்பு கட்டவிழ்ந்தது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிலைநிறுத்தவும், அவற்றுக்கு அச்சுறுத்தலாக அமையக் கூடிய தமிழர்களின் பூர்வீக குடியிருப்புகளை அழித்து அகற்றவும், கிழக்கை சிங்களமயப்படுத்தும் நடவடிக்கையை உறுதிப்படுத்தவும் இராணுவ ஆக்கிரமிப்பு முன்னெடுக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் காலத்திலும் இந்தியப் படைகளின் பிரசன்னத்தின் போதும் சிங்களத்தின் இந்தப் பாச்சா பலிக்கவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சட்ட , தார்மீக முறைகளுக்கு மாறாக முன்னெடுக்கப்பட்ட முதல் இரண்டு கட்ட நடவடிக்கைகள் மூலம் – அதாவது திட்மிட்ட சிங்களக் குடியேற்றம் மற்றும் இராணுவ ஆக்கிரமிப்பு ஆகியவை மூலம் நிலை நிறுத்தப்பட்ட சிங்கள மயமாக்கலை – சட்ட ரீதியாக உறுதிப்படுத்தும் முறையற்ற நடவடிக்கையாகவே இந்த செயலணி உருவாக்கப்படுகின்றது என்பதைத் தமிழர் தரப்பு ஊகிப்பதற்கு அதிக அறிவு தேவையில்லை.

தொல்லியல் திணைக்களம், வன பரிபாலனத் திணைக்களம், வனசீவராசிகள் திணைக்களம், சூழலியல் திணைக்களம் போன்றவை மூலம் தமிழர்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களில் மீளக் குடியமர்வதற்கு, முட்டுக்கட்டை போட்டுத் தடை விதித்து வந்த சிங்கள அதிகார பீடம், இப்போது தமிழர்கள் குடியிருக்கும் பூர்வீக நிலங்களில் இருந்தும் அவர்களைத் துரத்தியடிக்க மகாவம்சப் புனைகதைகள் போன்ற திட்டங்களுடன் களத்தில் இறங்கப் போகின்றது. அதற்கான கால்கோள்தான் இந்த விசேட ஜனாதிபதி செயலணி.

இந்தப் பேரவலத்தை எதிர்கொள்ளத் தமிழ்த் தலைமைகள் என்ன செய்யப் போகின்றன?

# ராஜபக்ஷ அரசால் மலையக மக்கள் தொடர்ந்தும் வஞ்சிக்கப்படுகின்றனர்

## முன்னாள் அமைச்சர் திகாம்பரம் குற்றச்சாட்டு



மலையக மக்கள் ராஜபக்ஷ அரசால் வஞ்சிக்கப்படுகின்றனர் என்று தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அனைவரையும் வீட்டில் இருக்குமாறு அரசு கேட்டுக்கொண்டது. ஆனால், பெருந்தோட்டத் தொழிலாளர்களை வேலைக்குச் செல்லுமாறு கூறியது.

அதாவது இந்த நாட்டில் கொரோனா அல்ல சுனாமி, மண்சரிவு வந்தால்கூட தோட்டத் தொழிலாளர்கள் உழைத்தே சாப்பிட வேண்டும், நிவாரணம் வழங்கப்படாது என்பதே அரசின் மனநிலையாகும்.

ஏப்ரல், மே மாதங்களில் கடும் வறட்சி நிலவும். இக்காலப்பகுதியில் கொழுந்து இருக்காது. ஆனால், 18 கிலோ பறித்தால்தான் 750 ரூபா வழங்கப்படுகின்றது. இதனால் சம்பளம் குறைவாகவே கிடைத்துள்ளது.

இப்படியானவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவில்லை. இது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ ஆகியோரிடம் சுட்டிக்காட்டினோம். தீர்வு கிடைக்கவில்லை. எமது மக்கள் வஞ்சிக்கப்படுகின்றனர்.

ஏனைய மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் மற்றும் கொடுப்பனவுகள் மலையக மக்களுக்கு உரியவகையில் கிடைக்கவில்லை - என்றார்.

# சுற்றுலா வழிகாட்டிகளுக்கு விரைவில் காப்பீட்டுத் திட்டம்



இலங்கையில் சுற்றுலா வழிகாட்டிகளுக்கான புதிய காப்பீட்டு திட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தொழில்துறை ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு, சுற்றுலா மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் பிரசன்னா ரணதுங்க இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆணையத்தின் தலைவர் கிமர்லி பெர்னாண்டோவுக்கு உத்தரவிட்டார்.

அண்மையில், இலங்கையில் உள்ள பல சுற்றுலா வழிகாட்டி சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சுற்றுலா வழிகாட்டிகளின் உயர் மட்ட கூட்டத்தில் அவர்களின் வேலைப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக முறையான காப்பீட்டு திட்டத்தை அறிமுகப்படுத்துமாறு அமைச்சர் ரணதுங்காவை வலியுறுத்தினர்.

காப்பீட்டு திட்டம் மற்றும் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி சலுகைகள் இல்லாதமையால் வேலைப் பாதுகாப்பு இல்லாதது அவர்களை பெரிதும் பாதித்துள்ளது எனவும், இலங்கையில் மூன்று சுற்றுலா வழிகாட்டிகள் கோவிட் 19 நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களில் ஒருவர் ஏற்கனவே இறந்துவிட்டார் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடு முழுவதும் ஏறத்தாழ 5000 சுற்றுலா வழிகாட்டிகள் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆணையத்தில் பதிவு செய்துள்ளனர் எனவும், தற்போதைய நிலையில் தங்களுக்கு சலுகை அடிப்படையில் கடன் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தும் படியும் பிரதிநிதிகள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

குறைந்தபட்ச தினசரி ஊதியத்தை 35 அமெரிக்க டொலர்களாக உயர்த்தக் கோரி தங்கள் அமைப்புகள் சுற்றுலா மேம்பாட்டு ஆணையத்திற்கு கடிதம் எழுதியுள்ளன என அவர்கள் தெரிவித்தனர். இந்த கோரிக்கை குறித்து ஆணையம் ஏற்கனவே கவனம் செலுத்தியுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

# சீரற்ற காலநிலையால் டெங்கு நோய் அபாயம்

## நாட்டு மக்களுக்கு சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, மே 25

மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுகின்றது எனவும், டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் பொதுமக்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க நாட்டு மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

கொரோனா வைரஸ் அறிகுறி போன்றே டெங்குக்கான அறிகுறியும் காய்ச்சலாக இருப்பதால் அந்த இரண்டு நோய்களையும் ஒரே வேளையில் பிரித்தறிவது கஷ்டமானது என்றும், அந்த நிலையைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் செலுத்துமாறும் அவர் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

வீடுகள், நிறுவனங்கள், வீதிகள் உள்ளிட்ட இடங்களில் 'ஈட்ஸ்' எனப்படும் நுளம்பு சுத்தமான நீரில் உருவாவதால் அவ்வாறான இடங்கள் உருவாவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கொரோனா வைரஸ் நோய் மனிதருக்கும் மனிதருக்கும் இடையில் ஏற்படும் அதே வேளை டெங்கு நோய் மனிதனுக்கும் சுற்றாடலுக்கும் இடையிலான தொடர்புகளாலேயே உருவாகின்றது. இந்தநிலையில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தலோடு டெங்கு அச்சுறுத்தலுக்கும் முகங்கொடுக்க நேர்ந்துள்ளது எனவும், இக்காலங்களில் நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு உற்பத்தி அதிகரித்து வருகின்றது எனவும் அவர் மக்களை அறிவுறுத்தியுள்ளார்.

மக்கள் கொரோனா வைரஸ் நிலைமை தொடர்பில் முழுக்கவனத்தையும் செலுத்தி வருவதால் டெங்கு நோய் தொடர்பில் கவனம் செலுத்துவது குறைந்துள்ளது எனவும், மக்கள் அது தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கொரோனா மோசமாகத் தாக்கிய முதல் 10 நாடுகளில் இந்தியாவும்!



புதுடில்லி, மே 25

கொரோனா வைரஸால் மோசமாக பாதிக்கப்பட்ட முதல் 10 நாடுகளில் இந்தியா இடம்பிடித்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்தவண்ணம் உள்ளன.

ஊரடங்குக் கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்பட்டு, உள்நாட்டு விமான சேவை இன்று தொடங்கியுள்ளதுடன், ஜுன் முதலாம் திகதி முதல் ரயில் சேவையும் தொடங்கவுள்ளது.

இந்த சூழ்நிலையில் இன்று மத்திய சுகாதாரத்துறை வெளியிட்ட தகவலின்படி, இந்தியாவில் மொத்தம் 139,237 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 4,024 ஆக உயர்ந்துள்ளது. இதுவரை 57,745 பேர் கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்துள்ளனர்.

இதன்மூலம் கொரோனா வைரஸால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளில் ஈரானை பின்னுக்குத் தள்ளி, முதல் 10 நாடுகள் பட்டியலில் இந்தியா இடம்பெற்றுள்ளது.

அதற்கமைய கொரோனா பாதிப்பில் இந்தியா தற்போது 10ஆவது இடத்தில் உள்ளது.

மேலும் அமெரிக்கா முதலாவது இடத்திலும் தொடர்ச்சியாக பிரேசில், ரஷ்யா, ஸ்பெயின, பிரிட்டன், இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, துருக்கி போன்ற நாடுகளும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடமாநிலங்களில் அனல் காற்று வீசும்!

புதுடில்லி, மே 25

நாட்டின் வட மாநிலங்களில் அடுத்த 4 நாள்களுக்கு அனல் காற்று வீசக்கூடும் என வானிலை ஆய்வுத்துறை சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி பஞ்சாப், அரியானா, சண்டிகர், டில்லி, ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், தெலங்கானா, மகாராஷ்டித்தின் விதர்ப்பா ஆகிய பகுதிகளில் நான்கு நாள்களுக்கு அனல் காற்று வீசக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒரு சில இடங்களில் வெப்ப நிலை 48 பாகை செல்சியஸ் வரை உயரும் என்றும் எதிர்வுக்கூறப்பட்டுள்ளது.

தென்மேற்குப் பருவமழை ஆரம்பமாவதற்கு முன் வடமாநிலங்களில் அதிகப்பட்ச வெப்ப நிலை நிலவுவதுடன் அனல்காற்று வீசுவது வழக்கம்.

இருப்பினும் மக்களை பாதுகாப்பாக இருக்குமாறு வானிலை ஆய்வுத்துறை அறிவுறுத்தியுள்ளது.

# பிரபல இந்தி நடிகரை அறிகுறியே இல்லாமல் தாக்கியது கொரோனா

## அதிர்ச்சியில் இந்தி திரையுலகம்



புதுடில்லி, மே 25

பிரபல இந்தி நடிகர் கிரண்குமாரை அறிகுறியே இன்றி கொரோனா தாக்கியுள்ளதையடுத்து இந்தி திரையுலகம் அதிர்ச்சியடைந்துள்ளது.

இந்தி திரையுலகின் மூத்த நடிகரான கிரண்குமாருக்கு (வயது 72) கொரோனா பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. இவர் சில தினங்களுக்கு முன்பு மருத்துவமனைக்கு வழக்கமான மருத்துவ பரிசோதனைக்காகச் சென்று இருந்தார். அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவில் அவருக்கு கொரோனா அறிகுறிகள் இருப்பது தெரியவந்தது. இதையடுத்து வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளார். மீண்டும் அவருக்குப் பரிசோதனை செய்ய உள்ளனர்.

இது குறித்து கிரண்குமார் கூறும்போது, எனக்கு நோய் அறிகுறி எதுவும் இல்லை. கடந்த 14 ஆம் திகதி வழக்கமான மருத்துவச் சோதனைக்காக மருத்துவமனைக்குச் சென்றேன். அந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற கொரோனா சோதனை கட்டாயமாக்கப்பட்டு இருந்தது. எனவே எனக்கும் அந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது எனக்கு கொரோனா தொற்று இருப்பது தெரியவந்தது. ஆனால் காய்ச்சல், சளி எதுவும் இல்லை. தற்போது தனிமைப்படுத்தப்பட்டு இருக்கிறேன். எனது குடும்பத்தினர் 2ஆவது மாடியிலும் நான் மூன்றாவது மாடியிலும் இருக்கிறோம் – என்றார்.

ஏற்கனவே இந்தி பாடகி கனிகா கபூருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று குணமானார். ஷாருக்கான் நடித்த சென்னை எக்ஸ்பிரஸ், ரா ஒன் ஆகிய படங்களை தயாரித்த கரீம் மோரானிக்கும் அவரது மகள்கள் சா, ஜோயா ஆகியோருக்கும் கொரோனா பாதிப்பு ஏற்பட்டிருந்தது இதையடுத்து இந்தி திரையுலகம் அதிர்ச்சியடைந்துள்ளது.

# மருத்துவர்கள் குழுவுடன் எடப்பாடி ஆலோசனை!



புதுடில்லி, மே 25

மருத்துவ நிபுணர்கள் குழுவுடன் தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி நாளை செவ்வாய்கிழமை ஆலோசனை நடத்தவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஊரடங்கு உத்தரவு எதிர்வரும் 31ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில் மேற்படி ஆலோசனை நடத்தப்படவுள்ளது.

இதன்போது தமிழகத்தில் கொரோனா வைரஸின் தாக்கம் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதுடன், ஊரடங்கு உத்தரவை தளர்த்துவது குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 2 மாதங்களின் பின் சென்னை – டில்லி விமான சேவை ஆரம்பம்!



டில்லி, மே 25

கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் வகையில் இந்தியா முழுவதும் 4ஆவது கட்டமாக ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நிலையில் கடந்த இரு மாதங்களாக தடைப்பட்டிருந்த விமான சேவை மட்டுப்படுத்தப்பட்டதாக இன்று முதல் ஆரம்பித்துள்ளது.

ஊரடங்கில் சில தளர்வுகளை மத்திய அரசு அறிவித்தது. இதனால் இன்று உள்நாட்டு விமான சேவை தொடங்கப்படும் என மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் புரி தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், சென்னையில் உள்நாட்டு விமான சேவை இன்று காலை மீண்டும் தொடங்கியது. சென்னையில் இருந்து டில்லிக்கு 114 பயணிகளுடன் முதல் விமானம் இன்று காலை புறப்பட்டுச் சென்றது.

இரு மாதங்களுக்கு பிறகு உள்நாட்டு விமான சேவை இன்று தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# புலிகளுக்குப் பயிற்சி முகாம் அமைக்க இடம்தர முன்வந்த ஜமீந்தார் காலமானார்



சென்னை, மே 25

இந்தியாவில் முடிசூட்டி பட்டம் கட்டிய மன்னர்களில் கடைசி மன்னரான நெல்லை மாவட்டம் சிங்கம்பட்டி ஜமீந்தார் டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி உடல் நலக்குறைவால் காலமானார்.

இவர் தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்காகப் பயிற்சி முகாம்கள் அமைக்க முயன்ற காலத்தில் இடம்தந்து உதவ முன்வந்தவர் என தி.மு.க. செய்தி தொடர்பாளர், கே.எஸ்.ராதாகிருஷ்ணன் தனது முகநூல் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் ஜமீன் சொத்துக்கள் முடக்கப்பட்டு, ஜமீந்தார் முறை ஒழிக்கப்பட்ட நிலையில் இந்தச் சட்ட திருத்தத்திற்கு முன்பு கடைசியாக பட்டம் சூடித் தமிழகத்தின் கடைசி ஜமீனாக வந்தவர் சிங்கம்பட்டி ஜமீந்தாரான முருகதாஸ் தீர்த்தபதி. நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் தாலுகாவைச் சேர்ந்த இந்த ஜமீனே புகழ்பெற்ற சொரிமுத்து ஐயனார் கோயிலை நிர்வகித்து வந்தார்.

ஜமீன் சிங்கம்பட்டியில் சிங்கம்பட்டி அரண்மனை 5 ஏக்கரில் அமைந்துள்ளது. 1,000 குதிரைகளை வைத்து சிங்கம்பட்டி ஜமீனில் பராமரித்து வந்துள்ளனர். 5 தங்கப் பல்லக்குகள் இருந்தன. ஜமீன்சிங்கம்பட்டி அரண்மனையில் கிங் ஜோர்ஜ் தொடக்கப் பள்ளி இப்போதும் செயற்பட்டு வருகிறது.

இந்நிலையில் 89 வயதாகும் ஜமீன் முருகதாஸ் தீர்த்தபதி, நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு உடல்நலக் குறைவால் காலமானார்.

இது குறித்து தி.மு.க. செய்தி தொடர்பாளர், கே.எஸ். ராதாகிருஷ்ணன் தனது முகநூல் பதிவில், நெல்லை மாவட்டம் சிங்கம்பட்டி ஜமீன்தார் டிஎன்எஸ் முருகதாஸ் தீர்த்தபதி உடல் நலகுறைவால் காலமானார். ஜமீந்தார் முறை ஒழிப்புக்கு பின்னர் இந்தியாவில் முடிசூட்டி பட்டம் கட்டிய மன்னர்களில் கடைசி மன்னர் இவர் தான்.

கடந்த 1983 ஈழப் பிரச்சினை கடுமையாக இருந்த போது இந்திரா காந்தி பிரதமராக இருந்த காலத்தில் விடுதலைப்புலிகளுக்கு பயிற்சி முகாம் அமைத்துக் கொடுக்கவும் அதற்கான உதவிகளைச் செய்யவும் மத்திய அரசு செயலில் இறங்கியது.

இவருடைய சிங்கம்பட்டி எஸ்டேட்டுக்கு உட்பட்ட பாபநாசம் மலைப் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கு பயிற்சி முகாம் நடத்த நல்ல இடம் என்று நெடுமாறனுடைய பரிந்துரையில் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன், பேபி சுப்ரமணியம் நானும் சென்று இவரை பார்த்தபோது, அந்த இடம் பயிற்சிக்கு ஏற்ற இடமாக இல்லை. அதைப் பார்த்துவிட்டு அவர் வீட்டுக்கு அழைத்து உபசரித்து அனுப்பியது இன்றைக்கும் நினைவில் இருக்கிறது எனப் பதிவிட்டுள்ளார்.

# உலக அளவில் கொரோனாப் பாதிப்பு 55 லட்சத்தையும் கடந்து செல்கிறது

உலக அளவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 55 லட்சத்தை கடந்துள்ள நிலையில், சுமார் 23 லட்சம் பேர் இந்த கொடுந்தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

தீவிர தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் போதிலும், சர்வதேச அளவில் கொரோனா பாதிப்பு குறைந்தபாடில்லை. உலகம் முழுவதும் இதுவரை 55 லட்சத்து 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொரோனா கொடுந்தொற்றுக்கு ஆளாகியுள்ளனர்.

சுமார் 3 லட்சத்து 47 ஆயிரம் பேரை பலிவாங்கிய கொரோனா தொற்றிலிருந்து சுமார் 23 லட்சம் பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

மீதம் 28 லட்சத்து 52 ஆயிரம் பேருக்கு மருத்துவமனைகளில் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களுள் 53 ஆயிரம் பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது.

பாதிப்பு மற்றும் உயிரிழப்புகளின் அடிப்படையில் அமெரிக்கா தொடர்ந்து முதலிடத்தில் நீடித்து வருகிறது. அங்கு இதுவரை 16 லட்சத்து 86 ஆயிரம் பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், 99 ஆயிரத்து 300 பேர் உயிரிழந்துள்ளனர்.

2 ஆம் இடத்திலுள்ள பிரேசிலில் 3 லட்சத்து 65 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளமையோடு 22 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

அதற்கடுத்தபடியாக ரஷ்யாவில் 3 லட்சத்து 44 ஆயிரம் பேரும், ஸ்பெயினில் 2 லட்சத்து 82 ஆயிரம் பேரும், பிரிட்டனில் 2 லட்சத்து 59 ஆயிரம் பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவற்றைத் தொடர்ந்து இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, துருக்கி, இந்தியா ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.



# அமெரிக்காவில் ஒரே நாளில் 20 ஆயிரம் பேருக்குத் தொற்று



அமெரிக்காவில் நேற்று மட்டும் ஒரே நாளில் 20,634 பேருக்கு புதிதாக கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அங்கு நிலைமையைக் கண்காணித்து வரும் ஜோன் ஹாப்கின்ஸ் மருத்துவப் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

இவர்களையும் சேர்த்து அமெரிக்காவில் தொற்று பாதித்தவர்களின் எண்ணிக்கை 16 லட்சத்து 86 ஆயிரம் ஆக உயர்ந்துள்ளது. அதே போன்று நேற்று ஒரே நாளில் 633 பேர் கொரோனாவுக்கு பலியாகினர்.

இதனால் இறப்பு எண்ணிக்கை 99 ஆயிரத்து 300 ஆக அதிகரித்துள்ளது.

அமெரிக்காவின் அனைத்து 50 மாநிலங்கள், கொலம்பியா மாவட்டம், இதர அமெரிக்க பகுதிகள் மற்றும் வெளிநாட்டில் இருந்து வந்த அமெரிக்கர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பையும் சேர்ந்த புள்ளிவிவரமாகும் இது எனவும் ஜோன் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

# அணு ஆயுத வலிமையை அதிகரிக்க வடகொரியத் தலைவர் தீர்மானமாம்



வட கொரியாவின் அணு ஆயுத வலிமையை அதிகரிப்பதற்கு அதிபர் கிம் ஜாங் உன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

வடகொரியத் தலைநகர் பியாங்யாங்கில் மத்திய இராணுவ ஆணையத்தின் கூட்டம் நடைபெற்றது.

அதிபர் கிம் ஜாங் உன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், அமெரிக்காவுடனான அணுஆயுத ஒழிப்பு பற்றிய பேச்சு நின்றுபோன நிலையில், அணு ஆயுத வலிமையை அதிகரிக்கும் கொள்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பிற நாடுகளின் அச்சுறுத்தலைச் சமாளிக்கும் வகையில் படை வலிமையையும் ஆயுதங்களையும் பெருக்கிக் கொள்வது குறித்தும் விவாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. கடந்த 2 மாதங்களாகக் கிம்மின் உடல்நலம் பற்றிப் பல்வேறு செய்திகள் வந்த நிலையில் அவர் முதன்முறையாக ஓர் அலுவல் கூட்டத்தில் பங்கேற்றுள்ளார்.

# பிரேசிலில் இருந்து அமெரிக்கா செல்லத் தடை விதிக்கப்பட்டது


*கொரோனா வைரஸ் வேகமாகப் பரவுவதால் பிரேசிலில் இருந்து பயணம் மேற்கொள்ள அமெரிக்கா தடை விதித்துள்ளது.*

*வெள்ளை மாளிகையின் செயலாளர் கெய்லீ மெக்னானி வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்காவைப் பாதுகாப்பதற்கான அதிபர் டிரம்பின் நடவடிக்கை இது என தெரிவித்துள்ளார்.*

*14 நாள்களுக்கு முன்பு பிரேசில் சென்றிருந்த பிற நாட்டினருக்கும் இந்தத் தடை பொருந்தும் என கெய்லீ மெக்னானி குறிப்பிட்டுள்ளார்.*

*ஏற்கனவே பிரிட்டன், ஐரோப்பா மற்றும் சீனாவில்இருந்து அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொள்ள தடை உள்ள நிலையில், அந்த பட்டியலில் தற்போது பிரேசில் நாட்டை அமெரிக்கா சேர்த்திருக்கிறது.*

# மலேரியா மாத்திரையை எடுப்பதை நிறுத்தினார் என்று டிரம்ப் அறிவிப்பு



மலேரியா எதிர்ப்பு மருந்தான ஹைட்ராக்சிகுளோரோகுயின் மாத்திரையை எடுப்பதை நிறுத்திக் கொண்டதாகவும், அதை எடுத்ததால் தமக்கு எந்த ஆபத்தும் ஏற்படவில்லை என்றும் அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

ஹைட்ராக்சிகுளோரோகுயினின் தீவிர ஆதரவாளரான டிரம்ப், இரண்டு வாரமாக அதை எடுத்துக் கொள்கிறார் என ஏற்கனவே தெரிவித்தார். அதே சமயம் அவரது நிர்வாகத்தின் கீழ் உள்ள மருத்துவர்கள், கொரொனா நோயாளிகளுக்கு ஹைட்ராக்சிகுளோரோகுயின் மாத்திரையை கொடுத்தால் ஆபத்து ஏற்படும் என எச்சரித்து வருகின்றனர்.

இரண்டு வாரங்களாக ஹைட்ராக்சிகுளோரோகுயின் மாத்திரையை எடுத்துக் கொண்ட பிறகும் தாம் நலமுடன் இருக்கிறார் என டிரம்ப் வெள்ளை மாளிகை செய்தியாளர் சந்திப்பில் கூறியமை பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்க மருத்துவர்கள், அவருக்கு தொற்று இல்லை என்பதால், எந்தப் பாதகமான விளைவுகளும் ஏற்படவில்லை என விளக்கம் அளித்துள்ளனர்.

# அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு இருவர் மரணம் 10 பேர் காயம்



செயின்ட் லூயிஸ்,மே25

அமெரிக்காவில் நேற்றும் துப்பாக்கி சூட்டுச் சம்பவங்களில் 2 பேர் பலியாகினர்.

அமெரிக்காவின் செயின்ட் லூயிசில் ஒருவர் கார் ஒன்றில் வைத்து மர்ம நபரால் பலமுறை துப்பாக்கியால் சுடப்பட்டு உள்ளார். இதன்பின்னர் மருத்துவமனையில் அவர் உயிரிழந்து உள்ளார்.

இதேபோன்று மற்றொரு துப்பாக்கி சூட்டிச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டு உள்ளார். இது தவிர 10 பேர் காயமடைந்து உள்ளனர். அவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இது பற்றிய கூடுதல் விவரங்களை பொலிஸார் வெளியிடவில்லை

நேற்று முன்தினம் நடந்த துப்பாக்கி சூட்டுச் சம்பவங்களில் 2 பேர் பலியான நிலையில் நேற்று இந்த சம்பவங்கள் நடந்து உள்ளன.

# பௌத்த, சிங்கள தேசியவாதத்தின் ஆதிக்கத்துக்காக வஞ்சக நடைமுறையாகத் தொல்லியல்துறை பயன்பாடு

## தமிழரசுப் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம் சீற்றம்

மட்டக்களப்பு,மே25

தொல்லியல் துறையில் பக்கச்சார்பற்ற நடைமுறை பேணப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டும். இத்துறைக்கென நியமிக்கப்படுவோர் துறைசார் நிபுணர்களாக இருக்க வேண்டும், நாட்டின் பன்மைத்துவத்தைப் பிரதிபலிக்கக்கூடிய விதத்தில் இத்துறையில் நியமனங்கள் அத்தியாவசியமானதாகும். அதைவிடுத்து நாடு முழுவதையும் சிங்கள பௌத்த தேசியவாதத்தின் பரப்புக்குள் கொண்டு வரும் வஞ்சக நடைமுறையாகவே தொல்லியல் துறை இலங்கையில் கையாளப்படுகிறது என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.

தொல்லியல் துறை தொடர்பில் அமைக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியின் தலைவராக முன்னாள் இராணுவத் தளபதி நியமிக்கப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கிழக்கு மாகாணத்திலுள்ள தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக் கையாளுவதற்கான ஜனாதிபதி செயலணியொன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. இதன் தலைவராக முன்னாள் இராணுவத் தளபதி கமால் குணரட்ண அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார். இவ்விடயம் பல்வேறு கேள்விகளை எழுப்புகின்றது. பொதுத் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் வேளையில் இவ்வாறான நியமனங்கள் செய்யப்பட முடியுமா? எந்தவொரு நியமனமும் இக்காலத்தில் செய்யப்பட முடியாது என்பதே பொதுவான விதியாகும். காரணம் அது வாக்காளரைக் கவர்வதற்கான அனுமதிக்கப்பட முடியாத ஒரு செயல் என்பதும், இவ்வாறான விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்ப முடியாதிருக்கும் என்பதுமேயாகும்.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ இவ்விடயங்கள் தொடர்பில் மிகவும் அலட்சியமாக, சட்டங்களை மதிக்காத வகையில் அல்லது அசட்டைத் துணிவோடு, குறிப்பிடப்பட்ட இக்காலத்தில் செய்யப்பட முடியாத பல செயல்களைத் தொடர்ந்து செய்த வண்ணமே இருக்கின்றார்.

தொல்லியல் இடங்கள் தொடர்பான விடயங்கள் தொன்மங்களைக் கண்டறிதல் என்பவற்றுக்கு அப்பால் இலங்கை முழுவதையும் சிங்கள பௌத்த தேசியவாதத்தின் பரப்புக்குள் கொண்டு வருகின்ற வஞ்சகத் தனமான ஒரு நடைமுறையாகவே இலங்கையில் தொடர்ச்சியாகக் கையாளப்பட்டுக் கொண்டு வருகின்றது.

உண்மையில், மிகவும் அவதானத்தோடும் நிதானத்தோடும் உண்மையைக் கண்டறியும் இத்துறையில் பக்கச்சார்பற்ற நடைமுறை பேணப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பது இன்றியமையாத ஒரு விடயமாகும். இவ்வகையில் இத்துறைக்கென நியமிக்கப்படுவோர் துறைசார் நிபுணர்களாக இருக்க வேண்டும் என்பதும் முதன்மையான அம்சமாகும். அதேவேளை இலங்கையின் பன்மைத்துவத்தை பிரதிபலிக்கக்கூடிய விதத்தில் இத்துறையில் நியமனங்கள் இடம்பெறுதலும் அத்தியாவசியமாதனதாகும்.



நடைபெற்றிருக்கும் நியமனமானது மேற்குறித்த எந்த நியமங்களையும் பின்பற்றாத ஒன்றாகவே அமைகின்றது. பொதுத் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இவ்வேளையில் தனது கட்சிக்கு பௌத்த,சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் வகையில் ஜனாதிபதி நடந்து கொள்கின்றார் என்பது வெளிப்படையானதாகும். பதவிக்கு வந்த பின்னர் பல்வேறு துறைகளிலும் இராணுவ அதிகாரிகளை நியமித்து தன்னைச் சுற்றிவர இராணுவத்தினரால் ஒரு கவசத்தை அமைத்துக் கொள்கின்றார் ஜனாதிபதி என்கின்ற குற்றச்சாட்டு இருக்கின்றது. இதன் காரணமாக ஜனாதிபதித் தேர்தல் வெற்றியிலே ஜனாதிபதி அவர்களின் வெற்றிக்காக கடுமையாக உழைத்த வியத்மக குழுவினர் கூட இந்த இராணுவ வளையம் தொடர்பில் அதிருப்தியடைந்துள்ளார்கள் என்று சொல்லப்படுகின்றது. அண்மையில் சுகாதார அமைச்சு அத்துடன் மகாவலி அபிவிருத்தி மற்றும் விவசாய அமைச்சுகளுக்கான செயலாளர்களாக முன்னாள் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. அவர்களது அதிருப்தியிலிருந்து அவர்களை மீட்டெடுத்து தனது ஆதரவுப் பங்காளிகளாக ஆக்குவதில் ஜனாதிபதி கொண்ட அக்கறைதான் தொல்லியல் தொடர்பிலான இந்த நியமனம் என்று சொல்லப்படுகின்றது.

இந்த நாட்டின் உண்மையான பூர்வீகம் தொல்லியல் ஆதாரங்களோடு வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதிலே மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆனால் இலங்கையின் தொல்லியல் ஆய்வு நிறுவனமானது இந்த வகையில் இயங்கவில்லை என்பதை அடிப்படையாகக் கொண்டே கடந்த ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற புதிய அரசமைப்பு ஆக்க செயற்பாட்டில் நாங்கள் இவ்விடயம் தொடர்பில் அவதானமாயிருந்தோம். அரசமைப்பு வரைவின் உருவாக்கத்தில் அடுத்த அங்கமாக வனத்திணைக்களம், வனசீவராசிகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, தொல்லியல்துறை என்பன தொடர்பான சட்டங்கள் மீளாயப்பட்டு இவை தொடர்பில் மாகாணசபைகளுக்கு அதிகாரம் வழங்கக் கூடிய வகையிலான ஏற்பாடுகள் செய்யப்படுவதற்கான நடவடிக்கையில் நாங்கள் ஈடுபட்டிருந்தோம். வரைவின் இறுதி அங்கமாக இவ்விடயம் கையாளப்பட இருந்த வேளையிலேதான் ஒக்டோபர் 26 அரசியல் உறுதியின்மை நிகழ்வு ஏற்பட்டது. முழுக்க முழுக்க புதிய அரசமைப்பை வரவிடாது தடுக்கும் ஒரு செயலாக நாம் அதனைப் பார்த்தோம்.

இச்செயற்பாட்டின் தொடர்ச்சியான நிகழ்வுகளில் ஒன்றாகவே இந்த தொல்லியல் தொடர்பான ஜனாதிபதி செயலணி அமைகின்றது.

நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்ப முடியாத – மக்களைக் கூட்டி எதிர்ப்புத் தெரிவிக் முடியாத – இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுவது நாகரிக உலகம் அரசு மீது இன்னுமொரு கேள்வியைத் தொடுப்பதற்கு காலாய் அமையும்.

இதேவேளை வடக்கு கிழக்கு மாகாணங்களில் மொட்டுக் கட்சியிலும் அதற்கு ஆதரவு வழங்கக் கூடிய கட்சிகளிலும் வேட்பாளர்களாக நிற்பவர்களும் அவற்றின் தலைவர்களும் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். மேற்குறித்த விடயங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில் மொட்டுக் கட்சிக்கு ஆதரவு வழங்கும்படி மக்களை கேட்டுக் கொள்வதில் என்ன தார்மீக நியாயம் இருக்கின்றது என்பதை இவர்கள் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். பொய்மையால் மூடப்படவுள்ள எமது பாரம்பரியத்தை பாதுகாப்பதற்குத் தடையாக இருக்கும் தங்கள் சிந்தனைகளில் அவர்கள் தெளிவடைய வேண்டும். தமிழ் மக்களை தமிழர் அரசியல், தமிழர் பாரம்பரியம், வடகிழக்கில் தமிழர்களின் இருப்பு என்கின்ற விடயங்களின் பால் அக்கறையோடும், உறுதியோடும் செயற்படுகின்ற அரசியல் சக்திக்கு ஆதரவு அளிக்கும் வகையில் தங்களுடைய அரசியற் சிந்தனைகளை இந்தக் கடைசி நேரத்திலாவது சரியான திசைக்கு திருப்பும்படி கேட்டுக் கொள்கின்றோம். – என்றார்.

## வவுனியா விபத்தில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் இன்று உயிரிழப்பு

வவுனியா, ரயில் நிலைய வீதியில் இடம்பெற்ற மோட்டர் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி இன்று மரணமடைந்துள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி வவுனியா, குருமன்காடு பகுதியில் இருந்து நகர் நோக்கி ரயில் நிலைய வீதியில் மோட்டர் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் எதிர் திசையில் பயணித்த பாரவூர்தி ஒன்றுடன் மோதி, அதே திசையில் பயணித்த பட்டா ரக வாகனத்துடனும் மோதி விபத்துக்குள்ளாகினர். அதில் படுகாயமடைந்த நிலையில் அவர்கள் இருவரும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த அந்த இருவரில் வவுனியா, திருநாவற்குளத்தைச் சேர்ந்த கிறிஸ்ரி (வயது 39) என்ற இளம் குடும்பஸ்தரே மரணமடைந்துள்ளார். காயமடைந்த மற்றைநபர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகிறார். இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

### கொரோனா அபாயத்தையடுத்து

## 141 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மட்டக்களப்பில் தனிமைப்படுத்தல்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 141 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

விடுமுறையில் வீடுகளுக்குச் சென்று மீண்டும் கடமைக்குத் திரும்பியவர்களே இவ்வாறு கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றிவரும் பொலிஸ் உயர் அதிகாரி தொடக்கம் சாதாரண பொலிஸ் உத்தியோகத்தர் வரையில் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கல்லடி பொலிஸ் பயிற்சி முகாமில் அவர்கள் இன்று முதல் 7 நாள்களுக்குத் தனிமைப்படுத்தப்படவுள்ளனர்.

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையின் கீழ் அவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## ஊரடங்கை மீறிச் செயற்பட்ட 64 ஆயிரத்து 387 பேர் சிக்கினர்

*ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் நாடு முழுவதும் இதுவரை 64 ஆயிரத்து 387 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 8 ஆயிரத்து 169 வாகனங்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.*

*ஊரடங்குச் சட்டத்தை மீறியமை தொடர்பில் 20 ஆயிரத்து 497 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், 7 ஆயிரத்து 934 பேருக்கு எதிராக அபராதம் விதிக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.*

*நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில், கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி மாலை 6 மணி முதல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.*

*இதற்கமைய, நேற்றுக் காலை 6 மணி முதல், இன்று காலை 6 மணி வரையான 24 மணித்தியால காலப்பகுதியில் மட்டும் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் ஆயிரத்து 710 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன் 557 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.*





# விசுவமடு மாணிக்கபுரத்தில் காட்டு யானைகள் தொல்லை

## மக்கள் வெளியேறும் அச்ச நிலைமை





முல்லைத்தீவு, மே 25

முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடு பிரதேசம் மாணிக்கபுரம் கிராமத்தில் நாள்தோறும் காட்டு யானைகளின் தொல்லையினால் மக்கள் வாழ்இடத்தினை விட்டு வெளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் எனப் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்

மாணிக்கபுரம் கிராமத்தின் காட்டுக்கரையினை அண்டி வாழ்ந்துவரும் மக்களின் பயன்தரு விவசாயப் பயிர்களை காட்டு யானை நாள்தோறும் நாசம் செய்துவருவதால் தாம் தமது வாழ் இடத்தினை விட்டு வேளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என மக்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

கடந்த இரண்டு நாள்களாகத் தொடர்ச்சியாக மக்களின் காணிகளுக்குள் வரும் யானை மரவள்ளி,வாழைச் செய்கைகளை அழித்துள்ளதுடன் தென்னைமரம் ஒன்றையும் சாய்த்துள்ளது.

தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வரும் இந்த மக்களின் காணிகளில் நின்ற இருபத்தைந்திற்கு மேற்பட்ட பயன்தரு தென்னை மரங்கள் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக யானைகளால் அழிக்கப்பட்டுள்ளன. இறுதியாகக் காணியின் முற்றத்தில் நின்ற ஒரு தென்னை மரத்தையும் யானை அழித்துள்ளது பல மரங்களில் உள்ள பலாக்காய்களை யானை பிடுங்கி சேதப்படுத்தியுள்ளதுடன் மரத்தையும் தாக்கியுள்ள.

மாணிக்கபுரம் பகுதியில் வீட்டுத்தோட்டத்தைச் செய்துவரும் மக்களே வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று காரணமாக நாளாந்த வருமானம் இல்லாத நிலையில் தவித்து வருகின்றார்கள். இந்நிலையில் வீட்டுத்தோட்டமாக செய்கை பண்ணிய மரவள்ளி,வாழை போன்றவற்றையும் யானை அழித்துள்ளதாக கவலை தெரிவித்துள்ளார்கள்.

தொடர்ச்சியாக ஆண்டு தோறும் யானையினால் அழிவினை சந்தித்து வருவதாகவும் இதனல் வாழ்இடத்தினை விட்டு வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

யானைவேலி அமைத்து தருவதாக கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக சொல்லி வருகின்றார்கள். ஆனால் யானை வேலி அமைத்துக்கொடுக்கப்படவில்லை என்று தெரிவித்த மக்கள் அரசாங்கம் மாறி மாறி ஆட்சிக்கு வந்தாலும் பாதிக்கப்படும் மக்களின் துயர் துடைக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்கள்.

# கண்டியில் எலிக்காய்ச்சலால் இரு இளைஞர்கள் உயிரிழப்பு

## மத்திய மாகாணத்தில் 24 பேர் பாதிப்பு

கண்டி, மே 25

நாட்டில் மீண்டும் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் தலைதூக்கியுள்ளது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்டி வைத்தியசாலையில் அண்மையில் சேர்க்கப்பட்ட 20 மற்றும் 30 வயது இளைஞர்கள் இருவர் எலிக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தநிலையில் தொடர்ந்தும் 12 பேர் வரை வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவருகின்றனர் எனவும், மத்திய மாகாணத்தில் இம்மாதம் இதுவரை 24 பேர் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி வைத்தியசாலையில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் டபிள்யூ.கே.எஸ். குலரத்ன மேற்படி தகவல்களை வெளியிட்டுள்ளார்.

# ராஜபக்சக்களுடன் ரணில் அணி 'டீல்'

## சம்பிக்க குற்றச்சாட்டு!



ஊழல், மோசடி விசாரணைகளில் இருந்து ராஜபக்ஷ பரம்பரையை ரணில் அணியே காப்பாற்றியது. உண்மையான ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்திக்குள்தான் இருக்கின்றது. எனவே, ரணில் தரப்பு என்பது அரசின் பங்காளியாகும்.

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களில் 90 வீதமானோர் ஐக்கிய மக்கள் சக்தியின் பின்னால் அணி திரண்டுள்ளனர். அக்கட்சியிலுள்ள எஞ்சிய ரணில் தரப்பை சேர்ந்த உறுப்பினர்கள் ஆளுங்கட்சிக்கு சார்பாக – அரச பங்காளிகளாக செயற்பட்டு வருகின்றனர்.

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அன்று கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றை செய்துகொடுத்து அவரை ஜனாதிபதித் தேர்தலுக்கு ரணில் தரப்பே கொண்டுவந்தது. அதுமட்டுமல்ல ஊழல், மோசடி விசாரணைகளில் இருந்து ராஜபக்ஷ பரம்பரையையும் காப்பாற்றியது. எனவே, அந்த அணியில்தான் அரசியல் 'டீல்' காரர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்திதான் பரந்துபட்ட தேசிய அரசியல் இயக்கமாகும். தேசப்பாற்றாளர்கள் எல்லாம் எம்முடன்தான் இருக்கின்றனர். குடும்ப ஆதிக்கத்துக்கு எதிராக போராடக்கூடிய வல்லமையும் எமக்கே இருக்கின்றது. தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் இதனை தெளிவாக அறியலாம் – என்றார்.

# விசேட அதிரடிப் படையினர் சுற்றிவளைப்பு; வவுணதீவில் துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள கண்ணகிபுரம், பாவற்கொடிச்சேனை காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான உள்ளூர் தயாரிப்புத் துப்பாக்கியுடன் ஒருவரை விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

தாண்டியடி விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய நேற்றிரவு முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு சோதனையின்போது இந்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் கைப்பற்றப்பட்ட உள்ளூர் தயாரிப்பு கைத்துப்பாக்கியுடன் வவுணதீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவர் ஆயுதக்குழுவொன்றின் முன்னாள் உறுப்பினர் எனத் தெரியவந்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

விஞ்ஞானி



16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

தினம் ஒரு தலைப்பு

## சித்திரப்போட்டி

**நாளைய (26.05.2020) தலைப்பு விஞ்ஞானி**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.

* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.

* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.

* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.

* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**





## குவைத்திலிருந்து திரும்பிய 49 பேருக்குக் கொரோனா!

நாட்டில் நேற்றைய தினம் 52 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடையவர்களாக அடையாளம் காணப்பட்டனர். இதனால் நாட்டில் பதிவான உறுதிப்படுத்தப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கையை 1,141 ஆக உயர்த்தியது.

அவர்களில் 49 பேர் சமீபத்தில் குவைத்திலிருந்து திரும்பி வந்து தனிமைப்படுத்தப்பட்ட மையங்களில் இருந்தவர்கள் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதில் மினேரியா தனிமைப்படுத்தப்பட்ட மையத்திலிருந்து 42 பேரும் மற்றும் திருகோணமலை தனிமைப்படுத்தப்பட்ட மையத்திலிருந்து 7 பேரும் அடங்குவர்.

மற்றையவர்களில் 2 பேர் கடற்படை பணியாளர்கள். ஒருவர் இந்தோனேசியாவிலிருந்து திரும்பி, பெல்வெஹெராவில் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளவர் ஆவார்.

## மேலும் ஒரு தொகுதி இலங்கையர் ரஷ்யாவிலிருந்து நாடு திரும்பினர்

*ரஷ்யாவில் சிக்கித் தவித்த 181 இலங்கையருடன் சிறப்பு விமானம் ஒன்று இன்று காலை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு வந்து சேர்ந்தது.*

*மொஸ்கோவிலிருந்து ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான யு.எல்.1206 எனும் இலக்க விமானதின் மூலம் இன்று காலை 5.50 மணியளவில் இவர்கள்வந்தடைந்தனர்.*

*வழமையான சுகாதார பாதுகாப்பு சோதனை நடவடிக்கைகளின் பின்னர் பயணிகள் அனைவரும் பல பஸ்களில் தனிமைப்படுத்தப்பட்ட மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.*

*ரஷ்யாவிலிருந்து திரும்பும் இலங்கையின் இரண்டாவது தொகுதி இதுவாகும். முன்னதாக மே 22 அன்று மொஸ்கோவிலிருந்து 261 பயணிகளைக் கொண்ட ஒரு விமானம் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.*

# உற்சவங்களை சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்ப நடத்துவதற்கு அனுமதி வழங்குமாறு கோரிக்கை

### அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஆதீனம் கோரிக்கை

(திருக்கோவில் நிருபர் - எஸ்.கார்த்திகேசு)

கொழும்பு, மே 25

இலங்கை அரசு சுகாதார விதிமுறைகளுடன் அரச, தனியார் நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு அனுமதி தந்து மக்களின் அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு வழங்கி வரும் ஆரோக்கியமான ஒத்துழைப்புக்கு அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை இலங்கை மக்களின் ஆன்மீக ரீதியிலான வழிபாடுகளுக்கும் ஆலய உற்சவங்களை சுகாதார விதிமுறைகளுக்கு உட்பட்டு மேற்கொள்வதற்கும் கூட அரசு அனுமதி வழங்க வேண்டும் என அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஆதீனப் பணிப்பாளர் இறைபணிச் செம்மல் கண.இராஜரெத்தினம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் இனி வருகின்ற மாதங்கள் இந்துக்களின் அம்மன் ஆலயங்களின் திருக்குளிர்த்தி உற்சவக் காலம் ஆகையினால் இந்துகள் வருடம் தோரும் நிறைவேற்றி வருகின்ற நேர்த்திக் கடன்களை தவறாது இம்முறையும் நிறைவேற்றிக் கொள்வதற்கு ஏற்புடைய வகையில் மட்டுப்படுத்தப்பட்ட முறையில் ஆலயங்களின் உற்சவங்களை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை வழங்க வேண்டும்.

அரசின் பிரதேச ரீதியான சுகாதார, நிர்வாக மற்றும் முப்படை அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு அமைய, இந்துசமய கலாசார திணைக்களம் போன்ற தரப்புகள் ஊடாக ஆலய நிருவாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கி, பாதுகாப்பான சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி, ஆலய உற்சவங்களை நடத்துவதற்கான அனுமதிகளை வழங்குமாறு அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# மரண அறிவித்தல்

## இராஜா இராஜேந்திரராஜா



தோற்றம் 03 06 1930

மறைவு 24 05 2020

**யாழ் மானிப்பாய் தெற்கை பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. இராஜா இராஜேந்திரராஜா (பத்திரிகையாளர்) 24.05.2020 அன்று அகால மரணமடைந்தார். மானிப்பாய் தெற்கு காலஞ்சென்ற W.M இராஜா - தையல்நாயகி தம்பதிகளின் புதல்வரும் காலஞ்சென்ற கந்தையா - பாக்கியம் (நல்லூர்) அவர்களின் மருமகனும் ஆவார்.**

**காலஞ்சென்ற தனலட்சுமியின் அன்பு கணவரும் R.R. இராஜ்குமார் (J.R.B Group -Ganada), இராஜலட்சுமி - (கனடா), இராஜநாதன் (UK), இராஜ மனோகரி (ரஜினி - கனடா), ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சுமதி இராஜ்குமார், கிருபானந்தம், சாந்தினி இராஜநாதன், சஞ்சித் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற சேனாதிராஜா, தேவராஜா (UK), காலஞ்சென்ற ரட்ணராஜா, காலஞ்சென்ற திருமதி. ராஜேஸ்வரி பிரகாசம், காலஞ் சென்ற மகேந்திரராஜா, காலஞ் சென்ற செல்வராஜா ஆகியோரின் சகோதரரும் காலஞ் சென்ற பூலோகலட்சுமி, P.K மகேந் திரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் சாய் பிருந்தன், ஜெதார்த்தன், கிரிஜா, ரஜீவன், சிரான், யானுனி, சபிலன், மிதுலன், திவ்யா ஆகியோரின் பேரனும் ஆவார், அன்னாரின் ஈமைக் கிரியைகள் அவரது இல்லத்தில் (338, பருத்துறை வீதி, நல்லூர், சங்கிலியன் தோப்பு என்ற முகவரியில்) 27.05.2020 (புதன்கிழமை) காலை 8.30 - 11.30 வரை நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.**

**தொடர்புகளுக்கு -**
**R.R. இராஜ்குமார் (கனடா) - 16472896164**
**இராஜலட்சுமி (கனடா) - 16477806832**
**இராஜநாதன் (UK) - 447877159928**
**இராஜமனோகரி (கனடா) - 16476854551**
**கஜன் (இலங்கை ) - 077 5581 490**
**தேவரஞ்சன் (Scout) - 077 558 1626**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.05.2020 இல் வெளியிடப்பெற்றது.